விவசாயிகளுக்கு, வருமானம் வரக்கூடிய அந்தத் தொழிற்சாலையிலேயிருந்து ஓரளவுக்காவது நஷ்டஈடு கொடுக்க அரசு ஏதாவது பேச்சு வார்த்தை நடத்த முயற்சி எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் நீங்கள் சொன்ன யோசனையை வேண்டுமானால் அரசினுடைய பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஏ.எம். சேதுராமன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த டானரி தொழில் அதிகமான அளவுக்கு முதலிலே இராணிப்பேட்டையிலும், அடுத்த படியாக வாணியம்பாடி பகுதியிலும் இந்தக் கழிவு நீர் அதிகமாக பாலாற்றில் விட்டுவிடுகிறார்கள். அதன் காரணமாக இராணிப்பேட்டையிலே உள்ள மக்கள் ஆற்காட்டுக்கே குடி வந்துவிடலாமா என்று அச்சப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இதை உடனடியாகக் கவனித்து இந்தக் கழிவு நீர் பாலாற்றிலே கலப்பதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, அதையும் அரசு உடனடியாகப் பரிசீலிக்கும்.

கிராமங்களில் சாண எறிவாயு உற்பத்தி செய்யும் திட்டம்

*வினா எண் 470—திரு. த. புருஷோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் பெரிய அளவில் மாட்டுச்சாண எரிவாயு உற்பத்தி செய்வதற்கு அரசிடம் ஏதேனும் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப, குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 35,000 சாண எரிவாயு அமைப்புக்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் நடப்பு ஆண்டில் 3,500 அமைப்புகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1982—மார்ச்சு–11]

திரு. ந. சிவஞானம்: துணைத் தலைவர் அவர்களே, கிராமப் புறத்தில் மாட்டுச் சாண எரிவாயுத் திட்டம், தமிழ் நாட்டிலே எல்லா இடங்களிலும் தீவிரமாக அமல்படுத்துவதற்கு மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் அதிகாரிகளை நியமிக்க உத்தேசம் உண்டா என்பதை அறிவதோடு, அங்கே உள்ள ஏழை மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், தேசிய வங்கிகளின் மூலமாகவும் கடன் வசதி பெறுவதற்கு—ஏனென்றால் இப்போது அவர்களுக்குச் சரியாக கடன் கிடைப்பதில்லை—கடன் கொடுக்க அரசு வற்புறுத்துமா என்பதை அறிவதோடு தற்போது 20% தான் மானியமாக அளிக்கப்படுகிறது, அதை 30 சதமாக உயர்த்தி அளிக்க அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசின் திட்டம். இந்தத் திட்டம் பிரதமர் அவர்கள் அறிவித்த 20 அம்சத் திட்டத்திலே இதுவும் ஒன்று. இந்தத் திட்டத்தில் மொத்தம் இந்தியா முழுவதும் 4 லட்சம் சாண எரிவாயு அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிலே 35 ஆயிரம் அமைப்புகளை ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழகத்தில் நிறுவ கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டில் 3,500 சாண எரிவாயு அமைப்புகள் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக கொடுக்கின்ற மானியம் பழம்குடி மற்றும் ஆதிதிராவிட மக்களாக இருந்தால் அவர்களுக்கு 50 சதவிகிதம் இன்று மானியமாக கொடுக்கப்படுகின்றது. சிறிய, நடுத்தர விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 33 சதவிகிதம் மானியமும், மற்றவர்களுக்கு 25 சதவிகிதம் இதிலே மானியமாகக் கொடுக்கப்படுகின்றது. இன்று இந்த திட்டத்தின் மூலமாக ஒரு 10 பேர் கொண்ட குடும்பத்திற்கு ஒரு சாண எரிவாயு அடுப்பு ஏற்படுத்தவேண்டும் என்று சொன்னால் 5,500 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்தத் தொகை தேசிய வங்கிகள் மூலமாகக் கடன் கொடுப்பதற்கும், கால்நடை அதிகமாக வைத்திருப்பவர்களுடைய நிலையை கவனத்தில் எடுத்துக் கொண்டு, இது போன்று திட்டங்களை அமல் படுத்த தமிழகத்திற்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, சாணம் பொதுவாக நோய்களைக் கொல்லும் என்பது விதி. அதை அறிந்துதான் நம் முன்னோர்கள் காலையில் எழுந்தவுடனே வீட்டுக்கு முன்னால் சாணம் தெளிக்கும் பழக்கத்தை உண்டாக்கி இருந்தார்கள். இன்றைக்கு அந்தப் பழக்கம் வர வர குறைந்து வருகிறது. அதனால் இந்த நோய் பரவுவது அதிகமாகிக் கொண்டு வருகிறது. எனவே கிராமப்புறங்களில் இந்த சாண எரிவாயுவைக் கொண்டு அதன் மூலமாகத் தெரு விளக்குகளைப் போட்டால், மின்சாரப் பற்றாக்குறையும் குறையும். அதனாலே விஷக் கிருமிகளும் கொல்லப்படும். எனவே

எல்லா கிராமங்களிலும் அரசு செலவிலே சாண எரிவாயு திட்டங்கிகளை செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, இது யார் யாருக்குத் தேவையோ அவர்களுக்கு அந்த அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு நன்மை செய்வதற்காக இந்தத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது—ஊர் நல அலுவலர்களின்மூலமாக யார் யார் விண்ணப்பங்கள் கொடுக்கிறார்களோ அவர்களுடைய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு கொடுக்கப்படும். அதற்காகத்தான், ஒரு சாண எரிவாயு அடுப்புக்கு ஊக்கத் தொகையாக 30 ரூபாய் என்ற அளவிலே ஊர் நல அலுவலர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதற்கான பயிற்சியும்கூட கோவை மாவட்டத்திலே வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே கொடுக்கப்படுகிறது. ஆகவே இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாக அமல் நடத்தமுடியும் என்று நம்புகிறோம். இதற்கு வேறு என்ன என்ன தேவை இருந்தாலும் எல்லோருக்கும் இந்தத் திட்டத்தினை விரிவாக்கவேண்டுமென்று நாம் கூறமுடியாது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் யார் யார் இதிலே முன்வருகிறார்களோ தேவையின் அடிப்படையில் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம். இந்த 35 ஆயிரத்தை அதிகமாக்க வேண்டுமென்று அரசின் சார்பில் பிரதம அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தால் ஒப்புக்கொள்வார்கள், ஆகவே எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படலாம்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்த சாண எரி வாயு அடுப்பின் மூலமாக மின்சாரத் தட்டுப்பாடு விறகுக்காக காடுகளை அழித்தல் போன்றவைகளைத் தடுக்க முடியும். இதற்காக ஏறத்தாழ 5 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. 35 சதவீதம் என்ற அளவுக்கு கொடுக்கும் மானியத்தை 50 சதவீதம் மானியமாகக் கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு வங்கிகளின் மூலமாகக் கடன்கொடுக்கப்படுகிற போது காலதாமதம் ஏற்படுகின்றன. ஆகவே ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகக் கடனை காலா காலத்திலே கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? அதோடு மானியத் தொகையை உயர்த்துவதற்கும் அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது ஒரு பெரிய திட்டம் என்று ஏற்கனவே சொன்னேன். 20 அம்சத் திட்டத்திலே இதுவும் ஒரு திட்டம். இப்போதுதான் நடைமுறைக்கே எடுத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் இதன் விளைவுகள் என்ன என்பதைப் பார்த்து கொடுக்கக்கூடிய மானியத்தை எவ்வளவு அதிகரிக்கவேண்டுமென்று மைய அரசுக்குத் தெரிவிக்கலாம். இது 100 சதவீதம் மத்திய அரசின் திட்டம், ஆகவே

1982 மார்ச் 11]

மத்திய அரசின் ஒப்புதல் வேண்டும, மாநில அரசின் திட்டம் என்றால் நாமே பரிசீலனை செய்து முடிவு செய்யலாம். ஆகவே மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி கொடுக்கக்கூடிய மானியத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: துணைத் தலைவர் அவர்களே, சாண எரிவாயு தயாரிக்கும் திட்டம்ஒன்றுக்குகிட்டத்தட்ட 5 ஆயிரம்ரூபாய் மதிப்பீடு ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் அதிலே மானியம் போக மீதித் தொகை பூராவுமே வங்கியினால் கொடுக்கப்படுகிறதா? இல்லையென்றால் அரசாங்கம் மானியம் கொடுப்பதைப்போல் மீதித் தொகையை அரசாங்கமே கடனாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளின்மூலமாககடனாகக் கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்திலே அரசாங்கம் கொடுக்கிற மானியம் 50 சதவீதம் என்றால் 2,750 ரூபாய் கடனாகக் கொடுக்கப்படுகிறது. அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். ஆகவே பாக்கி யிருக்கிற தொகை கடனாகத்தான் கொடுக்கப்படுகிறது.

திரு. த. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, மாட்டுச் சாணம் தொழு உரம் தயாரிப்பதற்கும் முக்கியப் பயன் படுத்தப்படுகிற பொருள் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்வது ஆகும். என்னதான் விஞ்ஞான முறையிலே நவீன முறையிலே உரங்களை நாம் பயன்படுத்தலாம் என்று இருந்தாலும்கூட அடி உரம் என்ற முறையிலே தொழு உரம் அவசியமாகிறது. அது இல்லா விட்டால் வேளாண்மை உற்பத்தி இருக்காது என்று சொல்கிறார்கள். ஆகவே மாட்டுச் சாணம் எரிவாயுவாக தயா ரிக்கப்படுவதற்குப் பயன்படுத்தப்படுவதால் வேளாண்மை உற் பத்தி பாதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்படும் என்ற நிலை இருக்காது என்று நினைக்கிறேன்.

சுற்றுலா கார்களுக்கு அகில இந்திய உரிமம் வழங்கும் திட்டம்

*வினா எண். 471—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு 1981 82-ல் அகில இந்திய அளவில் செல்லக்கூடிய ''சுற்றுலா கார்களுக்கு'' உரிமம் வழங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?